11

# உரிமைகள் பிரகடனம்

## ஒரு ஐரோப்பிய கைது செய்வதற்கான ஆணை, தற்காலிக கைது கோரிக்கை அல்லது வேற்றரசிடம் ஒப்படைத்தல் ஆணை செயல்படுத்த, அதற்குரியவருக்கு கொடுக்க

நீங்கள் மேன் முறையீட்டு மன்றம் முதல் தலைவர் நியமித்த நீதிபதியால்கைது செய்ய பட்டிருக்கிறீர்கள், அதை உங்களுக்கு எதிராக ஒரு ஐரோப்பிய கைது செய்வதற்கான ஆணை, தற்காலிக கைது கோரிக்கை அல்லது வேற்றரசிடம் ஒப்படைத்தல் ஆணை உங்களுக்கு எதிராக இருந்தால். இந்த ஆவணம் உங்களுக்கு இருக்கின்ற முக்கியமான மூன்று உரிமைகளை நினைவுபடுத்துகிறது.

***<u>இந்த அவணத்தை நீங்கள் கைது செய்யப்படும் காலம் தோறும் வைத்து இருக்கலாம்</u>***

### குற்றத்தை பற்றி அறிவது

நீங்கள் சம்மந்தப்பட்ட இந்த குற்றத்தின் சட்ட குறிப்பு, நடைபெற்ற திகதி மற்றும் நடைபெற்ற இடத்தை தெரிந்துகொள்ளும் உரிமை உங்களுக்கு இருக்கின்றது அந்த குற்றதிற்குதான் உங்களுக்கு எதிராக ஐரோப்பிய கைது செய்தற்கான ஆணை, தற்காலிக கைது கோரிக்கை அல்லது வேற்றரசிடம் ஒப்படைத்தல் ஆணை இருக்கிறது.

### ஒரு வழக்கறிஞரால் உதவி

இந்த வழக்கு நடைபெறும் வரை, நீங்கள் தேர்ந்தெடுத்த அல்லது அரசாங்கம் கொடுக்கின்ற ஒரு வழக்கறிஞரின் உதவியை நாடலாம்.
நீங்கள் சுதந்திரமாக வழக்கறிஞருடன் உரையாடலாம் அல்லது கடிதம் அனுப்பலாம், மற்றும் அவர் உங்கள் எல்லா விசாரணைகளுக்கும் வரலாம், விசாரணை நேரத்தை அவருக்கு தெரிவிக்க வேண்டும். கோப்பின் விவரங்களை அவர் தெரிந்து கொள்ளலாம்.

### மௌனத்தை கடைபிடிக்கும் உரிமை

உங்கள் விசாரணை நேரத்தில், அறிக்கை அளிப்பதா, உங்களை கேட்கபோகிற கேள்விகளுக்கு பதிலளிப்பதா அல்லது மௌனமாக இருப்பதா என்று நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்.

**ஒரு மொழிபெயர்ப்பாளரின் உதவி**

நீங்கள் பிரெஞ்சு மொழியை பேசுபவர் அல்லது புரிந்து கொள்பவராக இல்லை என்றால், உங்கள் விசாரணைக்கும், உங்கள் வழக்கறிஞர் உடன் முறையிடவும் உங்களுக்கு இலவசமாக ஒரு மொழிபெயர்ப்பாளர் உதவி கேட்க உரிமை இருக்கிறது.

**உங்கள் ஒப்படைப்புக்கு சம்மதத்தை தெரிவிக்கும் வாய்ப்பு**

உங்களை தேடுகின்ற தேசத்திடம் உங்கள் ஒப்படைப்பு பற்றி நீங்கள் சம்மதம் அல்லது மறுப்பு தெரிவிக்க உரிமை உங்களுக்கு இருக்கிறது. நீங்கள் சம்மதம் தெரிவித்தால், விசாரணை அறை குறுகிய நேரத்தில் முடிவை எடுக்க வேண்டும். நீங்கள் உங்களுக்கு எதிராக ஐரோப்பிய கைது செய்தற்கான ஆணைக்குறிய உங்கள் ஒப்படைப்புக்கு சம்மதித்தால் உங்கள் முடிவை பிறகு மாற்ற முடியாது.

**சுதந்திரத்தை இழப்பு கால அளவு மற்றும்matrum உங்களை விடுவிக்க கேட்கும் உரிமை**

அந்த கால அளவு, உங்கள் ஒப்படைப்புக்கு நீங்கள் சம்மதித்தீர்களா அல்லது நீங்கள் மறுப்பு தெரிவித்தீர்களா என்பதை பொறுத்து. இருக்கிறது.
எந்நேரமும் உங்களை விடுவிக்க நீங்கள் விசாரணை அறை யிடம் கோரிக்கை வைக்கலாம்.

**சில நபருக்கு தெரிவிப்பது**

உங்களுக்கு விருப்பப்பட்ட நபருக்கு குறிப்பாக உங்கள் குடும்பத்தை சேர்ந்தவருக்கு நீங்கள் கைது செய்து இருப்பதை தெரிவிக்கலாம்.
நீங்கள் வெளிநாட்டை சேர்ந்தவராக இருந்தால், உங்கள் நாட்டின் தூதரக அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

**மருத்துவ பரிசோதனை**

நீங்கள் ஒரு மருத்துவ பரிசோதனை கேட்கலாம்.